॥ ஶ்ரீ ஹரி ॥

# ॥ நிலை 1-ஶ்ரீ மத்3ப4க3வத்3கீ3தா ஶுத்3த4 உச்சரிப்பிற்கான வழிகாட்டி ॥

**(இந்த வழிகாட்டி முதல் நிலை ப4க3வத்3கீ3தா படிப்பவர்களுக்காக உருவாக்கப்பட்டது)**

## குறில் மற்றும் நெடில் எழுத்துக்கான உச்சரிப்பு விதிமுறைகள்

- குறில் :- **அ, இ, உ, ரு, ல்ரு** போன்ற எழுத்துக்களை ஒலிக்கும் போது 1 மாத்திரை அளவு குறில் போன்று உச்சரிக்க வேண்டும் .
- நெடில் :- **ஆ, ஈ, ஊ, ரூ,ஏ,ஐ,ஓ , ஔ** போன்ற எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு 2 மாத்திரை அளவு இருக்க வேண்டும்.(குறில் போல் அல்ல)

## அனுஸ்வார் உச்சரிப்பு விதிகள் –

- **அனுஸ்வார்** - ஒரு எழுத்து அது உயிரெழுத்தின் பின்னால் 'ம்' என்ற உச்சரிப்போடு வரும் .. அதை **மூக்கின் வழியாக** சொல்ல வேண்டும் .
- **அனுநாஸிக்** - ஒரு எழுத்து அது உச்சரிக்கும் போது அதனை வாய் மற்றும் மூக்கின் வழியாக உச்சரிப்பது அனுநாஸிக் ஆகும்.
- அனுஸ்வார் தன்னை அடுத்து வரும் எழுத்தின் உச்சரிப்பிற்கு ஏற்றாற்போல் மாறும்.

## 'க' வர்க எழுத்துக்கள்

- **क -க1 / ख – க2 / ग- க3 / घ - க4 -** இந்த எழுத்துக்களின் உச்சரிப்பு **கழுத்தில் ( தொண்டையில்)** இருந்து வருகிறது .
- இந்த வர்கத்தின் அனுநாஸிக் எழுத்து **' ங் ' ङ** ஆகும். அதனால் இந்த வர்கத்தில் அம் என்ற அனுஸ்வாரம் வரும் போது 'ங்' என்ற எழுத்தாக உச்சரிக்க வேண்டும்.
  உதாரணம்: **கம்கண் (கங்கண்), பம்க்2 (பங்க்2)**
- **'க்ஷ'** அல்லது **க் + ஷ ஒரு கூட்டெழுத்து...** இதில் **'க்'** முதல் எழுத்து அதனால் **க்ஷ** என்ற எழுத்து க்கு முன்னால் வரும் அனுஸ்வார எழுத்து **' ங் '** ஆகும். உதாரணம்: **ஸம்க்ஷிப்த – ஸங்க்ஷிப்த**

**'ச' வர்க எழுத்துகள்**

- **च - ச1 / छ – ச2 / ज- ஜ1 / झ- ஜ2 - 'ச'** வர்க எழுத்துக்களை **மேல் வாயிலிருந்து (அண்ணம்)** உச்சரிக்க வேண்டும்.
- இதன் **அனுநாஸிக்** எழுத்து **ञ् ஞ்** அதனால் இந்த வர்கத்தில் வரும் எழுத்துக்கள் முன்னால் வரும் **அனுஸ்வார** எழுத்து **ञ् ஞ்** ஆகும். உதாரணம்: **சம்சல் (சஞ்சல் ), பம்சீ2 ( பஞ்சீ2 ), பம்ஜா (பஞ்ஜா), ராம்ஜா2 ( ராஞ்ஜா2).**
- **ज्ञ கூட்டெழுத்து ஜ்+ஞ** (ज्+ञ= ज्ञ). இதில் 'ஜ்' முதல் எழுத்து அதனால் **ज्ञ ஜ்ஞ** என்ற எழுத்திற்கு முன்னால் வரும் **அனுஸ்வார** எழுத்தின் உச்சரிப்பு **'ஞ்'** ஆகும்.
  உதாரணம்: **இதம் + ஜ்ஞானம்= இதஞ்ஜ்ஞானம்** என்று ஆகிறது.தமிழில் இந்த உச்சரிப்பிற்கு சரியான எழுத்துகள் இல்லை.

**'ட' வர்க எழுத்துகள்**

- **ट - ட1 / ठ – ட2 / ड – ட3 / ढ - ட4 / ण - ண -** இந்த எழுத்துகள் **நுனிநாக்கு மற்றும் அண்ணத்தின்** உதவியுடன் படிக்கப்படும்.
- இதன் **அனுநாஸிக் ण् (ண்)** .. அதனால் இந்த **'ட'** வர்க முன்னால் வரும் அனுஸ்வாரத்தை **'ண்'** என சொல்ல வேண்டும். உதாரணம்: **க4ம்டா (க4ண்டா), கம்ட2 (கண்ட2), பம்டி3த (பண்டி3த), ஷம்ட4 (ஷண்ட4).**

**'த' வர்க எழுத்துகள்**

- **त - த1/ थ- த2 / द- த3 / ध- த4 / न -ன, ந** - **நுனிநாக்கு மேற்பல்லோடு** பொருந்துவதால் உண்டாகும் எழுத்துகள் இவை ...
- இந்த வர்கத்தின் **அனுநாஸிக் न् (ந்).** அதனால் இந்த வர்க எழுத்துக்களுக்கு முன்னால் வரும் **அனுஸ்வாரத்தை (ந்)** என சொல்ல வேண்டும். உதாரணம்:**பம்த(பந்த) , பம்த2(பந்த2) ,**
  **கம்த3 (கந்த3) , அம்த4 (அந்த4).**
- 'த்ர' **கூட்டெழுத்து (த்+ர=த்ர)** இதில் **'த்'** முதல் எழுத்து அதனால் **'த்'** முன்னால் வரும் அனுஸ்வாரம் **'ந்'** ஆகும். உதாரணம் - **தம்த்ர (தந்த்ர)**

**' ப' வர்க எழுத்துகள்**

- **प - ப1/ फ ப 2/ब ப3/ भ ப 4/ म ம -** இவை அனைத்தும் **உதட்டால்** உச்சரிக்கப்படும் எழுத்துக்கள்.இதன் **அனுநாஸிக்** எழுத்து **'ம்'.**
- இதனால் இந்த வர்கத்தின் முன்வரும் **அனுஸ்வார் 'ம்'** ஆகும். உதாரணம் - **சம்பா (சம்பா), இம்பா2ல் (இம்பா2ல்), ஸம்ப3ல (ஸம்ப3ல) த3ம்ப4 (த3ம்ப4) .**

## அவர்கீய எழுத்துக்கள்

**य - ய , र - ர , ल - ல , व - வ , श - ஶ , ष - ஷ , स - ஸ , ह - ஹ**

**மேலே குறிப்பிட்ட எழுத்துக்களுக்கான அனுஸ்வார விதிகளை இனி பார்க்கலாம்.**

ஒரு வார்த்தையில் 'ய' முதல் 'ஹ' வரை உள்ள எழுத்துக்கு முன் **அனுஸ்வாரம்** வரும் போது அது **(அனுநாஸிக்).. ய், ல், மற்றும் வ் ஆக வருகிறது**. கீழே கொடுக்கப்பட்ட சில உதாரணங்களில் [] அடைப்புக்குறிக்குள் உள்ள எழுத்துகள் உண்மையில் அவ்விடத்தில் இல்லை. **அம்** என்ற அனுஸ்வாரத்திற்கு பதிலுள்ள எழுத்துக்கள் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இது முதன்மை நிலை படிப்பாளர்களுக்காக அவர்கள் புரிந்து கொள்வதற்காக அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது.

- **ய** - **ஸன்யம்** [ஸன்(ய்)யம் – **ஸய்யம்**] , **ஸன்யுக்த** [ஸன்(ய்)யுக்த - **ஸய்யுக்த** ] , **ஸன்யோகி3தா**[ ஸன்(ய்)யோகி3தா-**ஸய்யோகி3தா]**
- **ல** - **ஸன்லக்3ன** [ஸன்(ல்)லக்3ன-**ஸல்லக்3ன**] , **ஸன்லாப** [ஸன்(ல்)லாப-**ஸல்லாப**]
- **வ** - **ஸம்வாத3** [ஸம்(வ்)வாத3- **ஸவ்வாத3**], **ஸம்வேத3னா** [ஸம்(வ்)வேத3னா-**ஸவ்வேத3னா**]
- **ர** - **ஸன்ரசனா** [ஸன்(வ்)ரசனா - **ஸவ்ரசனா**] **ஸன்ரக்ஷண்** [ஸன்(வ்)ரக்ஷண் - **ஸவ்ரக்ஷண்**]
- **ஶ** - **ஸந்ஶய** [ஸந்(வ்)ஶய-**ஸவ்ஶய**], **வந்ஶ்** [வந்(வ்)ஶ்-**வவ்ஶ்**]
- **ஸ** - **கன்ஸ** [கன்(வ்)ஸ - **கவ்ஸ**], **ஸன்ஸார** [ஸன்(வ்)ஸார - **ஸவ்ஸார**]
- **ஹ** - **ஸிம்ஹ** [ஸிம்(வ்)ஹ - **ஸிவ்ஹ**], **ஸம்ஹார்** [ஸம்(வ்)ஹார்-**ஸவ்ஹார்** ]

**சொல்லின் இறுதியில் அனுஸ்வார் வரும் போது 'ய' முதல் 'ஹ' வரை உள்ள எழுத்துக்கள் அடுத்த வார்த்தையின் முதல் எழுத்தாகும் போது உச்சரிக்கும் முறை.**

ஒரு சொல்லின் இறுதியில் அனுஸ்வாரம் வரும் போது அதன் பின் எழுத்து 'ய' முதல் 'ஹ' வரை வரும் போது அந்த உச்சரிப்பு ஆகும்.

- **ய** - த4ர்ம்யாம்ருதமித3ம்(ய்), யதோ2க்தம்
- **ர** - லோகமிமம்(ம்) ரவி:
- **ல** – ததோ3த்தமவிதா3ம்(ல்) லோகான்
- **வ** – த்4யானம்(வ்) விஷிஷ்யதே
- **ஷ** - இத3ம்(ம்) ஷரீரம்
- **ஸ** - ஏவம் (ம்) ஸதத
- **ஹ** - க்ஷயம் (ம்) ஹின்ஸாம்

## விஸர்க உச்சரிப்பு விதிகள்–

**விதி 1: ஒரு சொல்லின் (பதத்தின்) கடைசியில் வரும் விஸர்க உச்சரிப்பு**

விஸர்கம் எப்பொழுதும் உயிரெழுத்தின் பின்னாலேயே வரும். பகவத் கீதையில் ஒரு பாடலில் இறுதியில் வரும் எழுத்து **'ஹ'** என்றால் அது முன்னுள்ள உயிர்-எழுத்தின் அடிப்படையில் **ஹ,ஹா, ஹி, ஹீ, ஹே** என்று மாறுகிறது

**எழுத்து விஸர்க உச்சரிப்பு உதாரணம்**

- 'அ' ஹ,ஹா ஸவ்ஷய**:** - ஸவ்ஷயஹ/ஸவ்ஷயஹா
- 'ஆ' ஹா ரதா: - ரதாஹா
- இ, ஈ,ஐ ஹி(குறில்) மதி: - மதிஹி, த4ர்மை: - த4ர்மைஹி
- உ ஹு குரு: -குருஹு
- ஊ, ஔ ஹூ **கௌ4**: - கௌ4ஹூ
- ஏ ஹே பூ4மே: பூ4மேஹே
- ஓ ஹோ மானாபமான**யோ:** - மானாபமானயோஹோ

**விதி 2: சில குறிப்பிட்ட எழுத்துகளுக்கு முன்னால் வரும் விஸர்க உச்சரிப்பு**

இரண்டு சொற்களுக்கு நடுவில் வரும் விஸர்க உச்சரிப்பு அதன் அடுத்து வரும் எழுத்தை பொருத்து வரும்.

- ஒரு விஸர்கத்திற்குப் பின் **க1, க2** வந்தால் அந்த விஸர்க உச்சரிப்பு க்2 போன்று உச்சரிக்க வேண்டும்.
  உதாரணம்: மை**த்ர: க**ருண ஏவ ச - மைத்ர**க்2** கருண ஏவ ச
- ஒரு விஸர்கத்திற்கு பின் **ப1, ப2** வந்தால் அந்த விஸர்க உச்சரிப்பு ஃப்2 போன்று உச்சரிக்க வேண்டும்.
  உதாரணம்:
  த**த:**பதந்தத்பரிமார்கி3தவ்யம் - த**தஃப்2**பதந்தத் பரிமார்கி3தவ்யம்
- விஸர்கத்திற்கு பின் **ஸ, ஶ , ஷ** வந்தால் அதை ஸ் , ஶ் , ஷ் என்ற உச்சரிக்க வேண்டும். **உதாரணம்:**

யோ மத்3ப4க்**த: ஸ** மே ப்ரிய - யோ மத்3ப4க்**த**(ஸ்) ஸ மே ப்ரிய

ஊர்த்4வமூல மத4: ஶாக2ம் – ஊர்த்4வமூல ம**த4**(ஶ்) ஶாக2ம்

ம**ன:ஷ**ஷ்டா2னீந்த்3ரியாணி-மன(ஷ்) ஷ்டா2னீந்த்3ரியாணி

**சிறப்பு விதி:** விஸர்கத்திற்கு பிறகு 'க்ஷ' வந்தால் அந்த விஸர்க உச்சரிப்பு ஹ, ஹி,ஹு ,ஹே ஆகும் உதாரணம்: தேஜ: க்ஷமா = தேஜஹ க்ஷமா

## விஸர்க சந்தி விதி-

கீதையில் இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதும் போது **र - ர், स - ஸ்,श - ஶ் , ष - ஷ்** ஆகிய எழுத்துகள் வரும் போது விஸர்கத்தில் மாறுபாடு ஏற்படுகிறது. இந்த விஸர்க சந்தி இலக்கணம் மிகவும் பெரியது. இப்போதைக்கு பிடிஎப் (pdf) ல் எங்கே எப்படி மாறுபடுகிறதோ அதன்படி பயிற்சி செய்யலாம்.

உதாரணம்: புத்3**தி4:யோ**–புத்3தி4ர்யோ,

பரயோபே**தா:தே** – பரயோபேதாஸ்தே, வே**தை3: ச** – வேதை3ஶ்ச

**மேலே குறிப்பிட்ட எழுத்துக்களைத் தவிர வேறு எழுத்துக்கள் வரும் போது அது விதி-1 ன் படி ஹ, ஹி, ஹு, ஹே ஆக இருக்கும்.**

**அவக்ரஹ (S)-**

**அவக்ரஹ(S)** இது இரு வார்தைகள் ஸந்தி (இரு வார்தைகள் சேர்தல்) ஸந்தியின் போது அந்த இடத்தில் **'அ'** இருந்ததைக் குறிப்பிடுகிறது.அதற்கென்று தனியாக எந்த உச்சரிப்பும் கிடையாது.அதற்கு முன்னால் வரும் எழுத்தை கொஞ்சம் நீளமாக உச்சரிக்க வேண்டும்.( நெடில் போல்). உதாரணம்: ப்ரயாணகா**லே + அ**பி - ப்ரயாணகா**லேS**பி

**ஆகா4த் (அழுத்தமாக ) உச்சரிப்பு விதி-**

- ஒரு இடத்தில் **கூட்டெழுத்து** (2 மெய்யெழுத்துக்கள்) வரும் போது அதில் முதல் வரும் எழுத்தை அழுத்தமாக உச்சரிக்க வேண்டும். அதை காண்பிப்பதற்காக ஒவ்வொரு ஸ்லோகத்திலும் **।।** இந்த சின்னம் தரப்பட்டுள்ளது.

  **க்ஷ** (க்+ ஷ ) , **த்ர** (த்+ ர ) , **ஜ்ஞ** ( ஜ் + ஞ ), **த்ய** ( த் + ய ) , **வ்ய** (வ் + ய)

  இதெல்லாம் கூட்டெழுத்துக்கள் ஆகும்.

  உதாரணம்: ம**வ்யக்த**ம் – ம**வ்**+ வ்ய**க்** + க்தம் மே **ப்ரி**ய: - மே**ப்** + ப்ரிய:

- எந்த மெய்யெழுத்தோடு உயிர் எழுத்து சேரும் போது அங்கே கூட்டெழுத்து வருவதில்லை. அதனால் அங்கு அழுத்தம் தரத் தேவையில்லை. உதாரணம் : **'ரு '** உயிரெழுத்து . **'விஸ்ருஜாம்யஹம்'** என்ற வார்த்தையில் **ஸ்ரு (ஸ்+ ரு)** முன்னால் **வி** வந்தாலும் அதை அழுத்தமாக உச்சரிக்கத் தேவையில்லை. கூட்டெழுத்துக்களின் முன்னால் உயிர் எழுத்தின் மீது மட்டும் அழுத்தம் தரவேண்டும். மெய்யெழுத்தோ , அனுஸ்வாரமோ அல்லது விஸர்கமோ வந்தால் தேவையில்லை.
  உதாரணம் : **வாஸுதே3வம் (ம்) வ்ரஜப்ரியம்** . இதில் **வ்ர கூட்டெழுத்தாக** இருந்தாலும் அதன் முன் **அனுஸ்வாரம்** இருப்பதால் அழுத்தம் தர தேவையில்லை.

- சில இடங்களில் உயிரெழுத்துக்கு பிறகு கூட்டு எழுத்து இருந்தாலும் விதிவிலக்கு விதியின் காரணமாக **ஆகா4த்(அழுத்தம்)** தர தேவையில்லை.

  ஒருங்கிணைந்த எழுத்துகளில்

  1. இரண்டு முறை ஒரே எழுத்து வருவதால், எ.கா **மய்யாவேஶ்ய** - ய எழுத்து இரு முறை வருவதால் **ம**-வில் அழுத்தம் தர தேவையில்லை.|
  2. மூன்று மெய்யெழுத்துகளின் **கூட்டு எழுத்துகள்** வரும் போது **ப4க்த்யா** மற்றும் **யேன்த்3ரிய** போன்ற சொற்களில் **ஆகா4த்(அழுத்தம்)** தர தேவையில்லை.|
  3. ஒரு வார்த்தையின் முதல் எழுத்திற்கு பிறகு **ர்** (ரேப்2) அல்லது **ஹ்** போன்ற **கூட்டெழுத்தாக** வருமாயின் **ஆகா4த்(அழுத்தம்** )தர தேவையில்லை.**ஸர்வத்ர** மற்றும் **குஹ்ய** போன்ற சொற்களில் **ஆகா4த்(அழுத்தம் )**தர தேவையில்லை.

சமஸ்கிருத மொழியில் எழுத்துகளின் உச்சரிப்புக்கு வாயின் வெவ்வேறு இடங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த படத்தில் எழுத்துக்களின் உச்சரிப்பு இடங்கள் காட்டப்பட்டுள்ளன. நியமிக்கப்பட்ட இடத்தை பயன்படுத்துவதன் மூலம் நமது உச்சரிப்பை முடிந்தவரை தூய்மையாக்கலாம். சமஸ்கிருத மொழி எவ்வளவு அறிவியல் மற்றும் வளமானது என்பதை பின் வரும் படத்தில் இருந்து அறியலாம்.




|| इति ||


*கீதா பரிவாரின் ஆவணங்களை வேறு எந்த இடத்திலும் பயன்படுத்த முன் அனுமதி அவசியம். அனுமதி பெற விரும்புவோர் தங்கள் நோக்கத்தை எங்களுடன் இந்த இணைப்பில் consent@learneeta.com தொடர்பு கொண்டு எழுதவும்.*